**_ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்_**

**_சாதாரணக் கூட்டம்_**

**2020** *ம் ஆண்டு* **மார்ச்** *மாதம்* **31** *ம் நாள் செவ்வாய்க் கிழமை பிற்பகல்* **4.00** *மணியளவில் நடைபெற்ற* **_சாதாரணக்_** *கூட்ட நடவடிக்கைகள்.*

***முன்னிலை :- திரு. ப. சத்தியநாதன் B.S.C,***
***தனி அதிகாரி.***

## <u>பொருள் எண் : 458</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியின் 2019-20 ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடும், 2020-21 ம் ஆண்டிற்கான வரவு செலவு உத்தேச மதிப்பீடும் தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** 2019-20 ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீட்டிற்கும் 2020-21ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் :-</u>** **<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் எண் : 459</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் கடந்த சுமார் இரண்டாண்டுகளாக திரு. M.K. ஜின்னா என்பவர் 5 ம் வகுப்பு ஒப்பந்தக்காரராக பதினைந்து இலட்சத்திற்கு வேலைகள் செய்துள்ளார். இந்நிலையில் ஐந்தாம் வகுப்பிலிருந்து, நான்காம் வகுப்பிற்கு உயர்வு செய்து தருமாறு 09.03.2020 ல் ஒப்பந்தக்காரர் மனு செய்துள்ளார். இந்நகராட்சியில் பதினைந்து இலட்சத்திற்கு மேல் பணி செய்துள்ளதால் திரு. M.K. ஜின்னா, ஒப்பந்தக்காரரை நான்காம் வகுப்பு ஒப்பந்தக்காரராக உரிய பதிவு கட்டணம் செலுத்தி உயர்வு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 1409/2020/E1

**<u>தீர்மானம் :-</u>** **<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் எண் : 460</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-20 ன் படி கீழ்வரும் அட்டவணையில் காணும் பணிகளை ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 3822/2019/, Dated:02.03.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | <u>வரையறுக்கப்பட்ட இதர பணிகள்</u><br>ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 24 ல் புதிய நியாய விலைக்கடை அமைத்தல். | 10.00 |
| 2 | <u>இதர குடிநீர் பணிகள்</u><br>ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 1 தட்டாங்குளம்பட்டி போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல் | 3.00 |
| 3 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 1 தட்டாங்குளம்பட்டி போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 3.00 |

மேற்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிட்ட செயல்முறை ஆணை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

ந. க. எண் 6338/2019/E1

**<u>தீர்மானம் :-</u>** **<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 461</u>**

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் துறைவாரியான அரசு பழுதடைந்த கட்டிடங்களை சரி செய்ய அரசு முதன்மை செயலர் பொதுத்துறை (S.C) சென்னை அவர்களின் கடித எண் SR. IV / 407-1-2020, நாள் 09.03.2020 மற்றும் திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விருதுநகர் அவர்களின் கடித எண் ந.க.எண் C6/2422/2017, Dated:18.03.2020 ஆகிய கடிதங்களில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள 8 பயணியர் தங்கும் அறை கட்டிடங்களின் மேற்கூரையை பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 4,00,000/- க்கு நகராட்சி பொது நிதியின் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

ந. க. எண் 1672/2020/E1

**<u>தீர்மானம் :-</u>** **<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 462</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொதுப்பிரிவு, சுகாதாரப்பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு போன்ற பிரிவுகளில் உள்ள கணிணிகளுக்கு 5 KVA, UPS Battery மின் வாரியத்தின் மூலம் வரப்பெறும் மின்சாரம் வழியாக இயக்கப் பெறுவதால் இன்புட் ஆனது அவுட் புட்டாக வெளியேறும் போது மின்சாரம் ரிட்டன் ஆகின்றது. எனவே அனைத்து பிரிவுகளில் பயன்படுத்தப்படும் கணிணிகளையும் ஒருங்கிணைத்து மின்சார வழங்கும் வகையில் EB மற்றும் UPS கென தனித்தனியாக வயரிங் செய்யவும், அதற்கான சுவிட்ச் போர்டு அமைக்கவும் தேவையான மின் வயரிங் வாங்கி பொருத்தி கொடுக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

ந. க. எண் 1569/2020/E1

**<u>தீர்மானம் :-</u>** **<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 463</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திரு. சந்தான கிருஷ்ணன் / சந்திரன், என்பவர் துப்புரவு பணியாளராக 07.02.2014 ம் தேதியில் இருந்து பணிபுரிந்து வருகிறார். அன்னார் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக சிவகாசி நகராட்சிக்கு பணியிட மாறுதலில் செல்ல 13.03.2020 ம் தேதியில் விண்ணபத்தின்படி விருப்பம் தெரிவித்துள்ளார். மேற்படி திரு. சந்தானகிருஷ்ணன் / சந்திரன் துப்புரவு பணியாளரின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு மேற்படி துப்புரவு பணியாளரை சிவகாசி நகராட்சிக்கு பணியிட மாறுதலில் செல்ல அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு :-** | அனுமதிக்கலாம். (ந.க.எண் 1504/2020/F1 ) |
| **<u>தீர்மானம் :-</u>** | **<u>அனுமதிக்கப்பட்டது.</u>** |

**<u>பொருள் எண் : 464</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் 33, வார்டுகளிலும் நடைபெற்று வரும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும், நிலவேம்பு கசாயம் குடிநீர் பவுடர் ( 200 கிலோ கிராம் ) வாங்குவதற்கு மன்ற தீர்மான எண் 426, நாள் 28.02.2020 ன் படி அனுமதிக்கப்பட்டதன்படி, 13.03.2020 ம் தேதி கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | விலை விகிதம் | |
|---|---|---|---|
| வ.எண் | வேலையின் விபரம் | SRI BALAJI MARKETING | SRI VINAYAGA PHARMA |
| 1 | நில வேம்பு கசாயம் குடிநீர் பவுடர் (200 கிலோ கிராம்) | 1 கிலோ ரூ.1995/- ( GST உட்பட ) | 1 கிலோ ரூ.2205/- ( GST உட்பட ) |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப் புள்ளியை கொடுத்துள்ள, SRI BALAJI MARKETING, DINDUGAL என்ற நிறவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம். மன்றத்தின் முன் அனுமதிக்காக.

**<u>அனுமதிக்கலாம்:-</u>**
1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந. க. எண் 1252/2020/H1

**<u>தீர்மானம் :-</u> <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 465</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் குப்பைகளை அகற்றிய பிறகு துர்நாற்றம் வீசாமலும், ஈக்கள் மொய்க்காமலும் இருப்பதற்கு பயன்படுத்தப்படும் Lemon Grass Oil ( 150 Lit ) வாங்குவதற்கு மன்ற தீர்மான எண் 453, நாள் 28.02.2020 ன் படி அனுமதிக்கப்பட்டதன்படி, 13.03.2020 ம் தேதி கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | விலை விகிதம் | |
|---|---|---|---|
| வ.எண் | வேலையின் விபரம் | SRI BALAJI MARKETING | SRI VINAYAGA PHARMA |
| 1 | Lemon grass Oil ( 150 Lit ) | 1 லிட்டர் ரூ.3520/- ( GST உட்பட ) | 1 லிட்டர் ரூ.3658/- ( GST உட்பட ) |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப் புள்ளியை கொடுத்துள்ள, SRI BALAJI MARKETING, DINDUGAL என்ற நிறவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம். மன்றத்தின் முன் அனுமதிக்காக.

**அனுமதிக்கலாம்:-**
1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந. க. எண் 1253/2020/H1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 466</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 30 மேட்டு கடைசி தெரு மற்றும் பஜனை கூடத்தெருவில் பழுதடைந்த பொது குடிநீர் குழாயை சரி செய்து பூச்சு வேலைகள், டைல்ஸ் போன்ற பணிகளை ரூ.30000/- மதிப்பீட்டில் செய்ய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 28.02.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைகக்கு 02.03.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. கோ. வெங்கடேசன்,<br>நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>54. மேட்டு நாயுடு தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 31500/- |
| 2 | திரு. க. செந்தில்குமார்,<br>நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>A29/27, இடைய பொட்டல் தெரு,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 29990/- |
| 3 | திரு. எம். கே. ஜின்னா,<br>நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>நந்தவனம்பட்டித் தெரு,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 32000/- |

**அலுவலகக்குறிப்பு:-** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.29990/- குறைவான விலைவிகிதம் திரு.க. செந்தில்குமார், என்பவர் தந்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**ந. க. எண் 1119/2020/E1**

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 467**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 32 மல்லபுரம் தெருவில் பழுதடைந்துள்ள குடிநீர் பொது குழாய் தொட்டியை சரி செய்யும் பணியை ரூ.15000/- மதிப்பீட்டில் செய்ய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 02.03.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 03.03.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. கோ. வெங்கடேசன், நகராட்சி ஒப்பந்தக்காரர், 54. மேட்டு நாயுடு தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 16000/- |
| 2 | திரு. க. செந்தில்குமார், நகராட்சி ஒப்பந்தக்காரர், A29/27, இடைய பொட்டல் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 14990/- |
| 3 | திரு. எம். கே. ஜின்னா, நகராட்சி ஒப்பந்தக்காரர், நந்தவனம்பட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 15500/- |

**அலுவலகக்குறிப்பு:-** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.14900/- குறைவான விலைவிகிதம் திரு.க. செந்தில்குமார், என்பவர் தந்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**ந. க. எண் 1121/2020/E1**

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 468**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 6 கோட்டைத்தலைவாசல் மெயின் ரோடு மேல்பக்கம் வடக்கு தெருவில் பழுதடைந்துள்ள குடிநீர் பொது குழாய் தொட்டியை சரி செய்யும் பணியை ரூ.30000/- மதிப்பீட்டில் செய்ய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 03.03.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 05.03.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. கோ. வெங்கடேசன், நகராட்சி ஒப்பந்தக்காரர், 54. மேட்டு நாயுடு தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 31500/- |
| 2 | திரு. க. செந்தில்குமார், நகராட்சி ஒப்பந்தக்காரர், A29/27, இடைய பொட்டல் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 29990/- |
| 3 | திரு. எம். கே. ஜின்னா, நகராட்சி ஒப்பந்தக்காரர், நந்தவனம்பட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 31000/- |

**அலுவலகக்குறிப்பு:-** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.29990/- குறைவான விலைவிகிதம் திரு.க. செந்தில்குமார், என்பவர் தந்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**ந. க. எண் 1136/2020/E1**

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 469</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு– நகராட்சி பகுதிகளில் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகள் உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. அவ்வாறு உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படும் குப்பைகள் வெயில் உஷ்ணத்தினால் அடிக்கடி தீ ஏற்பட்டு அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் புகையினால் பாதிக்கப்படுவதால், பொது மக்களின் நலன் கருதி, வாடகைக்கு டிராக்டர் மூலம் ( கம்ப்ரஸர் பொருத்தப்பட்ட குடிநீர் வண்டி ) தண்ணீர் எடுத்து வரப்பட்டு, உரக்கிடங்கில் அடிக்கடி ஏற்படும் தீயை அணைக்க, அதற்கான ஒரு நாள் வாடகை மூலம் தண்ணீர் வண்டி ஏற்பாடு செய்யவும், இப்பணியினை இரண்டு மாத கால அளவிற்கு, ஒரு நாளைக்கு 6 நடைகள் வீதம் ( 60 நாட்கள் ) இப்பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**
1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந. க. எண் 1758/2020/H1**

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 470</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான மூன்று ஆண்டுகளுக்கு உரிம ஆணை வழங்கிய கடைகளுக்கு அடுத்த மூன்றாண்டுகளுக்கு கடைகளை புதுப்பித்து வாடகையில் 15% வாடகை உயர்வு செய்து கொள்ள அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 ன் படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான அட்டவணையில் கண்டுள்ள கடை வாடகைதாரர்கள் மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை 15% வாடகை உயர்வு செய்து புதுப்பித்து தருமாறு புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துள்ளனர். எனவே அரசாணையின்படி கீழ்கண்டுள்ள கடை வாடகைதாரர்களுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை 15% வாடகை உயர்வு செய்து புதுப்பித்து உரிமம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | கடை வரி விதிப்பு எண் | கடை எண் | வாடகை தாரர் பெயர் | கடை உரிமம் முடியும் காலம் | கடை உரிமம் புதுப்பிக்க வேண்டிய காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப் பட்டுள்ள வாடகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 130/ 266 | 3 | திரு.வி. செல்வநாயகம் | 30.11.2019 | 01.12.2019 முதல் 30.11.2022 | ரூ. 1374/- | ரூ. 1580/- |

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 7430/2018/A3

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 471</u>**

திரு. முருகேசன் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு டபிள்யூ. பி. எண் 1491/2015, வழக்கில் நீதிப்பேராணை பெறப்பட்டுள்ளதற்கு நகராட்சி வழக்கறிஞர் திரு. பி. ஸ்ரீநிவாஸ், அவர்களிடம் சட்ட கருத்துரை பெறப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட வழக்கில் சட்ட கருத்துரை பெறவும் அதற்கான கட்டணம் ரூ.3000/- வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 2728/2012/C1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 472**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண் 4, பெருமாள்பட்டி மெயின் ரோடு கீழ்பக்கமுள்ள சமுதாய கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமைக்காக இந்நகர் மன்ற தீர்மான எண் 318 நாள் 29.11.2019 ல் அனுமதி அளிக்கப்பட்டதன்படி மேற்கண்ட குத்தகை இனத்திற்காக நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நாள் 03.01.2020, 28.01.2020, 18.02.2020 மற்றும் 28.02.2020 ஆகிய நான்கு நாட்களில் யாரும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை. எனவே மேற்கண்ட குத்தகை இனத்திற்கான வைப்புத் தொகையினை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதிக்கு.

| வ.எண் | குத்தகை விபரம் | வைப்புத் தொகை | தற்போது நிர்ணயம் செய்யப்படும் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 பெருமாள்பட்டி மெயின் ரோடு கீழ்பக்கமுள்ள சமுதாய கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | 80,000 | 70,000 |

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 7284/2018/A3

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 473**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான கந்தாடைத் தெருவிலுள்ள பூதம்பிள்ளை காய்கறி கடையின் மாடியில் காலியாக உள்ள நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கடையினை வாடகை முறையில் அனுபவித்துக் கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண் 336 நாள் 29.11.2019 ல் அனுமதி அளிக்கப்பட்டதன்படி மேற்கண்ட குத்தகை இனத்திற்காக நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நாள் 03.01.2020, 28.01.2020, 18.02.2020 மற்றும் 28.02.2020 ஆகிய நான்கு நாட்களில் யாரும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை. எனவே மேற்கண்ட குத்தகை இனத்திற்கான வைப்புத் தொகையினை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதிக்கு.

| வ.எண் | குத்தகை விபரம் | வைப்புத் தொகை | தற்போது நிர்ணயம் செய்யப்படும் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட கந்தாடைத் தெருவிலுள்ள பூதம்பிள்ளை காய்கறிக் கடையின் மாடியில் காலியாக உள்ள கடையினை மாத வாடகை முறையில் அனுபவித்துக் கொள்ள குத்தகை உரிமம். | 80,000 | 60,000 |

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 6549/2019/A3

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 474</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மூன்றாண்டு குத்தகை இனங்களில் 1) ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் அரசு மருத்துவமனை முன்பு மற்றும் உழவர் சந்தையின் இடது பக்கம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இரு சக்கர வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2) இந்நகர் மருத்துவர் காலனியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன ஆடு வதை செய்யும் கூடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 3) ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஆகிய இனங்களுக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 302 நாள் 31.10.2019 ல் அனுமதி அளிக்கப்பட்டதன்படி மேற்கண்ட மூன்று குத்தகை இனங்களுக்கு நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நாள் 06.12.2019, 24.12.2019, 21.01.2020 மற்றும் 18.02.2020 ஆகிய நான்கு நாட்களில் யாரும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை. இந்நிலையில் மேற்கண்ட குத்தகை இனங்களுக்கான 18.03.2020 ம் தேதி நடைபெற்ற 5 ம் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ. எண் | குத்தகை இனம் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | சென்ற ஆண்டு குத்தகை தொகை | தற்போது வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | இரு சக்கர வாகன காப்பக வசூல் உரிமம் | திரு.T.V. ஆனந்தராஜ் | ரூ.6,19,628/- | ரூ.3,15,000/- |
| | | திரு.T. வனராஜ் | | ரூ.3,10,000/- |
| 2 | பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டண வசூல் உரிமம் | திரு.S. அழகர்சாமி | ரூ.7,72,191/- | ரூ.5,71,100/- |
| 3 | நவீன ஆடுவதை செய்யும் கூடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | ஒப்பந்தப் புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. | | |

மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண் 1 க்கான குத்தகை இனத்திற்கு 2018-19 ம் ஆண்டிற்கு ரூ.5,78,550/- ம் 2019-20 ம் நிதியாண்டிற்கு ரூ.6,19,628/- ம் திரு.T.V. ஆனந்தராஜ், என்பவரால் ஏலத் தொகை செலுத்தியதன்படி நடத்தி வருகின்ற நிலையில், தற்சமயம் மேற்படி குத்தகைதாரரே மிகவும் குறைந்த விலையில் ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்வது ஒப்பந்த விதியினை மீறிய செயலாகும். மேலும் மேற்படி இரு சக்கர வாகன காப்பகத்திற்கு அருகில் இயங்கி வரும் தனியார் இரு சக்கர வாகன காப்பகத்தினால் தனக்கு நஷ்டம் ஏற்படுவதாக திரு.T.V. ஆனந்தராஜ் குத்தகைதாரர் பலமுறை நேரிலும் கடிதத்தின் வாயிலாகவும் தெரிவித்துள்ளார். மேலும் இருசக்கர வாகன காப்பகத்தின் அருகில் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இல்லாத இடங்களையும் ஆக்கிரமித்து இரு சக்கர வாகனங்கள் நிறுத்துவதாகவும், நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலாக கட்டணம் வசூலிப்பதாகவும் திரு.T.V. ஆனந்தராஜ் என்பவர் மீது புகார் வரப்பெற்றுள்ளன. மேற்படி அட்டவணையில் வரிசை எண் 2 க்கான குத்தகை இனத்திற்கு 2018-19 ம் ஆண்டிற்கு ரூ.7,21,000/- ம் 2019-20 ம் நிதியாண்டிற்கு ரூ.7,72,191/- ம் திரு. சடையப்பன் என்பவரால் நடத்தப்பட்டு வருகின்ற நிலையில் தற்சமயம் மேற்படி குத்தகைதாரரின் மகனான திரு. அழகர்சாமி என்பவர் மட்டும் தற்சமயம் குறைந்த விலையில் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார், ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்வது என்பது ஒப்பந்த விதிகளை மீறிய செயலாகும். மேற்கண்ட மூன்று குத்தகை இனங்களுக்குமே 5 முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் ஏதம் பெறப்படாத நிலையிலும், ஏற்றுக் கொள்ளப்படாத நிலையிலும் உள்ளதால் மேற்கண்ட குத்தகை இனங்களின் வசூல் பணியினை நகராட்சி பணியாளர்கள் மூலமாக மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

ந. க. எண் 6099/2019/A3

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**